| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| திரு.சா.சேதுராம வர்மா,<br>அரசுத் தேர்வுகள் இயக்குநர்,<br>சென்னை – 600 006. | அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள் மற்றும்<br>இணை இயக்குநர் (புதுச்சேரி) |

ந.க.எண். 021504 /பி1/2022 நாள் :20.03.2023

ஐயா/அம்மையீர்,

பொருள் : சென்னை – 6, அரசுத் தேர்வுகள் இயக்ககம் – ஏப்ரல் 2023 பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வு – செவித்திறன் குறைபாடு மற்றும் டிஸ்லெக்சியா பாதிப்பு உள்ள தேர்வர்கள் – விடைத்தாளில் சிவப்பு மையில் குறிப்பு எழுதுதல் – குறித்த அறிவுரைகள் வழங்குவது – தொடர்பாக.

******

நடைபெறவுள்ள ஏப்ரல் 2023 பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வெழுதவுள்ள மாற்றுத் திறனாளித் தேர்வர்கள் தொர்பாக கீழ்க்காணும் நடைமுறைகள் தவறாமல் பின்பற்றப்பட வேண்டுமென்ற அறிவுரையை அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள் தங்களது ஆளுகைக்குட்பட்ட அனைத்து தேர்வு மைய முதன்மைக் கண்காணிப்பாளர்களுக்கு வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

1. **இருகை வசதி:**

   அனைத்து வகை மாற்றுத் திறனாளித் தேர்வர்களுக்கும் தரைத்தளத்தில் மட்டுமே தேர்வு இருக்கை வசதி ஒதுக்கப்பட்டிருத்தல் வேண்டும்

2. **கூடுதல் நேரச் சலுகை:**

   கூடுதல் நேர சலுகைக் கோரிய மாற்றுத் திறனாளித் தேர்வர்கள் அனைவருக்கும் வழக்கமான தேர்வு நேரத்துடன் கூடுதலாக 60 நிமிடங்கள் (1 மணி நேரம்) தேர்வெழுத தவறாமல் அனுமதி வழங்கப்பட வேண்டும்.

3. **டிஸ்லெக்சியா தேர்வர் விடைத்தாள்:**

   டிஸ்லெக்ஸியா பாதிப்புற்ற தேர்வர்களுக்கு சொல்வதை எழுதுபவர் (Scribe) நியமிக்கப்படாமல் தேர்வரே தேர்வெழுதும் முதன்மை விடைத்தாளின் முதல் பக்கத்தில் சிவப்பு நிற மையினால் "டிஸ்லெக்ஸியா தேர்வர்/Dyslexia Students" என்று எழுதப்படல் வேண்டும்.

..2..

4. செவித்திறன் குறைபாடுடைய மாற்றுத் திறனாளித் தேர்வர்களின் விடைத்தாள்:

செவித்திறன் குறைபாடுடைய மாற்றுத் திறனாளித் தேர்வர்களது முதன்மை விடைத்தாளில் முதல் பக்கத்தில் சிவப்பு நிற மையினால் செவித்திறன் குறைபாடுடைய தேர்வர் / HI Students என்று எழுதப்படல் வேண்டும்.

5. மாற்றுத் திறனாளி தேர்வர்களின் விடைத்தாட்களை சிப்பமாக்குதல்:

பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வின் போது கூடுதல் நேரச் சலுகைப் பெற்று தேர்வெழுதும் தேர்வர்கள் உள்ள அறையில் கண்காணிப்பாளர்கள், தேர்வு நேரம் முடிவடைந்தவுடன் பிற தேர்வர்களின் விடைத்தாட்களை சிப்பமாக்காமல் கூடுதல் நேரச் சலுகைப் பெற்று தேர்வெழுதும் தேர்வர்களின் தேர்வு நேரம் முடியும் வரை காத்திருக்க வேண்டும். மேலும், தேர்வு நேரம் (பிற்பகல் 01.15 மணி) முடிவடைந்தவுடன் நிலையான படை உறுப்பினர்களும் கூடுதல் நேரம் தேர்வெழுதும் தேர்வர்கள் உள்ள அறைக்குச் சென்று கூடுதலாக கண்காணிப்பு பணியை மேற்கொள்ள வேண்டும்.

பின்னர், மேற்குறிப்பிட்ட தேர்வரின் விடைத்தாட்களை மற்ற தேர்வர்களது விடைத்தாட்களுடன் சேர்த்து ஒரே சிப்பமாக்கி முதன்மைக் கண்காணிப்பாளரிடம் ஒப்படைக்க வேண்டும்.

ஒம்/-
இயக்குநர்

நகல்

1. அனைத்து மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்